# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2484/08 - 2026 අප්‍රේල් මස 17 වැනි සිකුරාදා - 2026.04.17

*2484/08 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

சனா.அலு.இலக்கம் : பிஎஸ்/ சீஎஸ்ஏ/00/06/20/02

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**மாண்புமிகு சனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களினால்.**

(முத்திரை)

**அநுர குமார திசாநாயக்க**

1. **கௌரவ குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்**
   **உயர் நீதிமன்ற நீதிபதி**
2. **கௌரவ ஆதித்திய காந்த மத்தும பட்டபெந்திகே அவர்கள்**
   **மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி**
3. **ஹேவாசிங்ஹகே சஞ்சீவ சோமரத்ன அவர்கள்**
   **மேல்நீதிமன்ற நீதிபதி**

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கையில் நிலக்கரி மூலமான மின்சார உற்பத்திச் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2026, ஏப்பிறல் மாதம் 16 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப் பிரிவில் அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்)கம்பனி மற்றும்/ அல்லது அதன் பதிலீட்டாளர்கள் மூலம் இலங்கைக்கு நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைச் செயல்முறை, நிலக்கரி மூலமான மின்சார உற்பத்தி தொடர்பாக மற்றும் அதற்கு இடைநேர்விளைவான அனைத்து செயற்பாடுகளின்போது வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் மூலம் மற்றும்/அல்லது அரச உத்தியோகத்தர்கள் மூலம் மற்றும்/அல்லது அரசியல்வாதிகள் மூலம் மற்றும்/அல்லது விநியோகத்தர்கள் மூலம் மற்றும்/அல்லது அவர்களின் முகவர்கள் மூலம் மற்றும்/அல்லது அவர்களின் நேரடி அல்லது மறைமுகமான தலையீட்டின் மூலம் பல்வேறு முறைகேடுகள் மற்றும்/அல்லது சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் கருத்து உருவாகியுள்ளதாலும்,


1A - G 46630 - 353 (2026/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காலப் பிரிவில் இலங்கைக்கு நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைச் செயல்முறை, அந்த செயல்முறையில் காணப்பட வேண்டிய அவதானம், தரப்படுத்தல் மட்டம் பற்றிய ஆய்வு, முன்னாய்வு மற்றும் பின்னாய்வு நடைமுறை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாலும்,

நிலக்கரி பெறுகைச் செயல்முறையை மேற்கொண்டு இறக்குமதி செய்யும் போது குறித்த நிலக்கரி உரிய தரத்தைக் கொண்டிராததன் காரணமாக நிலக்கரி மூலம் மேற்கொள்ளப்படும் மின்சார உற்பத்திச் செயல்பாடு எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இடம்பெறவில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாலும்,

மேற்குறித்த நிலக்கரி மூலமான மின்சார உற்பத்திச் செயல்முறையில் சட்ட ரீதியான மற்றும் நிதி ரீதியான முறைகேடுகள் மற்றும்/அல்லது சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாலும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய அரசியல் பதவிகளை வகிப்பவர்கள், அரச சேவையாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள் மற்றும்/அல்லது அவர்களின் முகவர்கள் ஆகியோரை இனங்கண்டு அவர்களின் வகைகூறும் மற்றும் பொறுப்புக்கூறும் அளவை இனங்கண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும்,

அவ்வாறு குறிப்பிடப்படும் ஏதேனும் முறைகேடுகள்/சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பின் எதிர்காலத்தில் அத்தகைய சம்பவங்களைத் தடுத்து உரிய நேர்மைத்திறனை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகளை அறிந்துகொள்ளும் தேவை உள்ளதாலும்,

மேலே சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பில் மக்கள் நலனுக்காக விசாரணை மேற்கொள்வதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படல் வேண்டுமென நான் கருதுவதனாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் விசுவாசம் என்பன பற்றிய மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும்கொண்டு, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேற்சொல்லப்பட்ட,

1. **கௌரவ குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க அவர்கள்**
   **உயர் நீதிமன்ற நீதிபதி**
2. **கௌரவ ஆதித்திய காந்த மத்தும பட்டபெந்திகே அவர்கள்**
   **மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி**
3. **ஹேவாசிங்ஹகே சஞ்சீவ சோமரத்ன அவர்கள்**
   **மேல்நீதிமன்ற நீதிபதி**

ஆகிய உங்கள் அனைவரையும் பின்வரும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அதாவது,

1. இலங்கையில் நிலக்கரி மூலமான மின்சார உற்பத்திச் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2026, ஏப்பிறல் மாதம் 16 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப் பிரிவில் வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி இலங்கைக்கு நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக மேற்கொண்ட அனைத்து பெறுகைச் செயல்முறைகளிலும் முறைகேடுகள்/ சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா இல்லையா என்பதையும் அதன் மூலம் அரசுக்கு நிதி ரீதியான பாதிப்பு ஏற்பட்டிருப்பின் அதனை மதிப்பீடு செய்தல்,

2. மேற்குறித்த காலப் பிரிவில் உரிய தரத்தைக் கொண்டிராத நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும் இதற்கான பெறுகைச் செயல்முறை, விநியோக செயல்முறை, தரப் பரிசோதனை செயல்முறை, வழிநடாத்துதல் செயல்முறை மற்றும் பயன்பாட்டு செயல்முறை உள்ளிட்ட தொடர்புடைய ஒட்டுமொத்த செயல்முறைகளையும் புலனாய்வுக்கு உட்படுத்தல்,

3. மேற்குறித்த முறையில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செயல்பாட்டை மேற்கொள்ளும்போது, மின்சார உற்பத்தி மட்டம் எதிர்பார்க்கப்பட்டவாறு பயனுள்ள விதமாக இடம்பெற்றுள்ளதா இல்லையா என,

4. குறித்த தரத்தைக் கொண்டிராத நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அந்த நிலக்கரியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மின்சார உற்பத்திச் செயல்முறையில் சட்ட ரீதியான மற்றும் நிதிசார் முறைகேடுகள்/சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதா இல்லையா என,

5. இந்த செயல்முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வெளிப்படுத்தப்பட்ட மற்றும்/அல்லது மறைமுக நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதா இல்லையா என்பது பற்றியும் அவ்வாறு இடம்பெற்றிருப்பின் குறித்த மீறல்களுக்கு எதிராக கொடுப்பனவுகளை இடைநிறுத்தல் மற்றும்/அல்லது ஏனைய இழப்பீட்டு செயல்முறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா இல்லையா என,

6. மேற்குறித்த 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய சம்பவங்கள் இடம்பெற்றிருப்பின் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய அரசியல் பதவிகளை வகிப்பவர்கள், அரச சேவையாளர்கள், வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் மற்றும் விநியோகத்தர்கள் மற்றும்/அல்லது அவர்களின் முகவர்கள் ஆகியோரை இனங்கண்டு அவர்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள்,

7. அவ்வாறு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் முறைகேடுகள் அல்லது சட்டவிரோத செயல்பாடுகள் எதிர்காலத்தில் நிகழ்வதனைத் தடுத்து உரிய நேர்மைத்திறனை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்,

8. மேற்குறித்த விடயங்களுக்கு மேலதிகமாக நிலக்கரி இறக்குமதி செய்து மின்சாரம் உற்பத்தி செய்தல் தொடர்பில் இடம்பெற்றுள்ளதாக வெளிப்படுத்தப்படக் கூடிய ஏனைய முறைகேடுகள் அல்லது சட்டவிரோத செயல்பாடுகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் அவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை ஆகியவற்றை

விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரை மற்றும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அந்த அறிக்கையின்படி எவரேனும் ஒருவரை சமூக அசமர்த்தத்திற்கு உட்படுத்த வேண்டும் என்பதால் பரிந்துரைக்கவும் எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்சொல்லப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவராக **உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ குலதுங்க முதியன்சேலாகே கிஹான் ஹிமான்சு குலதுங்க** ஆகிய உங்களை இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பாக புலனாய்வு செய்தல் தொடர்பில் தங்களுக்கு தோற்றப்படக்கூடியவாறான தேவையான அனைத்து விசாரணைகளையும் நடத்துவதற்கும், ஏனைய அனைத்து புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும், மேற்குறித்த ஆணையாளர்களான உங்களுக்கு இத்தால் அதிகாரம் மற்றும் தத்துவங்களை வழங்குவதோடு, இவ்வதிகாரப் பத்திரத் திகதியிலிருந்து ஆறு (06) மாதங்களுக்குள் தேவையான விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளை மேற்கொண்டு உங்களது முடிவுகள் மற்றும் பரிந்துரைகள், விதிக்கப்படும் (விதிப்பதற்கு பரிந்துரைக்கப்படும்) தண்டனைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இறுதி அறிக்கை மற்றும்/அல்லது இடைக்கால அறிக்கைகளை உங்கள் அனைவரதும் ஒப்பத்துடன் எனக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் தேவைப்படுத்துகின்றேன்.

மேலும், மேற்சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பான ஏதேனும் ஒரு புலனாய்வு அல்லது விசாரணையின் ஒரு பகுதி பகிரங்கமாக நடத்தப்படலாகாது என உங்களது தற்றுணிபின்படி முடிவு செய்யப்படுமாயின் அப்பகுதி பகிரங்கமாக நடத்தப்படலாகாது என இத்தால் நான் உங்களுக்கு பணிப்பு விடுகின்றேன்.

மேலும் உங்களின் ஆய்வு அல்லது விசாரணைப் பணிகளுக்காகத் தங்களால் தேவை எனக் கருதப்படக்கூடிய நிபுணத்துவ/தொழில்நுட்ப ஒத்துழைப்பினை அரச மற்றும்/அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும்/அல்லது நபர்களிடம் கோரக்கூடிய அதிகாரம் இத்தால் அளிக்கப்படுகிறது. அத்தகைய ஒத்துழைப்பு கோரப்படக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும்/அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும்/அல்லது நபர்களிடம் மற்றும் ஏனைய நபர்கள் அப்பணிகளுக்காக உரியவாறு வழங்கப்படக்கூடிய சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டுமென்பதோடு, வழங்கக்கூடிய சகல தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதையும் இத்தால் கோருவதுடன் பணிப்பும் விடுக்கின்றேன்.

மேலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க குறித்த சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த விசேட விசாரணை ஆணைக்குழுவுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆம் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

மாண்புமிகு சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**கலாநிதி என். எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 04 - 0089

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.